தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2043, தை 17

2012 ஜனவரி 31, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு"

பிறருக்கு உதவி செய்தல் என்னும் மிக உயர்ந்த பண்பு, விடாமுயற்சியுடன் செயல்பட்டு வெற்றி அடைபவரிடமே நிலைத்து நிற்கும்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. டி.என். வடிவேல் அவர்கள் 24–12–2011 அன்றும், திரு. வி.இரா. கிருஷ்ணசாமி அவர்கள் 30–12–2011 அன்றும், திரு. செ. தாமோதரன் அவர்கள் 8–1–2012 அன்றும், திரு. ஆ.மு. இராமசாமி அவர்கள் 12–1–2012 அன்றும், திரு. வி. வேதய்யன் அவர்கள் 17–1–2012 அன்றும், திரு. பி.எஸ். மணியன் அவர்கள் 23–1–2012 அன்றும் மற்றும் திரு. கோ. மோகனதாசன் அவர்கள் 24–1–2012 அன்றும் மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. டி.என். வடிவேல் அவர்கள் 1965 முதல் 1967 வரை தருமபுரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றினார்.

திரு. வி.இரா. கிருஷ்ணசாமி அவர்கள் 1985 முதல் 1988 வரை அணைக்கட்டு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்.

திரு. செ. தாமோதரன் அவர்கள் 2001 முதல் 2006 வரை விருதுநகர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்.

திரு. ஆ.மு. இராமசாமி அவர்கள் 1989 முதல் 1991 வரையிலும் மற்றும் 1996 முதல் 2001 வரையிலும் இரண்டு முறை ஆத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்.

திரு. வி. வேதய்யன் அவர்கள் 1957 முதல் 1962 வரை திருத்துறைப்பூண்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பான முறையில் பணியாற்றினார்.

திரு. பி.எஸ். மணியன் அவர்கள் 1967 முதல் 1971 வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 வரையிலும் இரண்டு முறை சோழவந்தான் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்.

திரு. கோ. மோகனதாசன் அவர்கள் 1996 முதல் 2001 வரை பூம்புகார் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றினார்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)